| O.S.No. 80/2024 | DW1: திருமதி. மகாலட்சுமி<br>க/பெ. திரு. கங்காதரன் | 20-11-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. வாதி அன்பழகன் எனது உறவினர் என்றால் இல்லை. எனது கணவர் பைனான்ஸ் தொழில் செய்திருந்தார். என் கணவர் இறக்கும் வரையில் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்றால் இல்லை, உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். எனது கணவர் அவருடைய குடும்ப செலவுக்காக அன்பழகனிடம் ரூ.4,00,000/- கடன் வாங்கிய விவரம் எனக்கும், என் குடும்பத்தினருக்கும் நன்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல, எங்களுக்கு தெரியாது. வாதியின் மகனது திருமணத்திற்கு என் கணவர் சென்று வந்தார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அன்பழகனும், என் கணவரும் உறவினர்கள் என்ற முறையில் என் கணவர் இறக்கும் வரையில் நட்புறவோடுதான் பழகி வந்தார்கள் என்றாலும், நான் வழக்கிற்காக இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. என் கணவருக்கு சர்க்கரை வியாதிதான், வேறு எந்த நோயும் இல். 2012-ம் வருடத்திலிருந்து 2019 வரை என் கவணவர் நீரிழிவு நோயால் பாதிகப்படவில்லை என்றாலும், அவர் நல்ல நிலையில்தான் இருந்தார் என்றாலும், நான் வழக்கிற்காக அவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும், அவரை நான்தான் கவனித்து வந்தேன் என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் வாதியிடம் வாங்கிய ரூ.4,00,000/-த்தை தவிர மேலும் ஒரு ரூ.3,00,000/- வாாங்கிய விவரம் எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல.

3. மேற்படி ரூ.3,00,000/-த்திற்கு வாதி எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து ஒருதலைபட்ச தீர்ப்பு பெற்றுள்ளார் என்ற விஷயம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. என் கணவர் படுத்த படுத்தையாக இருந்தார் என்றாலும், வாதியிடம் ரூ.4,00,000/- கடன் வாங்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் உயிருடன் இருந்தபோதே வாதி என் வீட்டினிடம் வந்து கடனை திருப்பி கேட்டார் என்று சொன்னால் அது சரியல்ல. என் கணவர் இருக்கும்போது பணத்தை திருப்பி கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னதால்தான் வாதி நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும், என் கணவர் இறந்தபிறகு வாதி பணத்தை கேட்டதற்கு நாங்கள் தரமுடியாது என்று சொன்னதால் வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல.

4. வாதி எனக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பினை நான் பெற்றுக்கொண்டேன், எனது மகனும் பெற்றுக்கொண்டார். மேற்படி அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு நாங்கள் கொடுக்கவில்லை என்றாலும், பதில் அறிவிப்பு கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் கணவர் இறந்தபிறகு செய்யாறு காவல் நிலையத்தில் பஞ்சாயத்து பேசியதில் வாதிக்கு பணத்தை திருப்பி கொடுக்கிறோம் என்று உறுதியளித்தோம் என்று சொன்னால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. என் கணவருக்கு சாதாராண நீரிழிவு நோய்க்குத்தான் சிகிச்சை அளித்தோம் என்றாலும், அவர் நல்ல நிலையில்தான் இருந்தார் என்றாலும் சரியல்ல. என் கணவர் இறந்த பிறகு அவருக்கு உண்டான சொத்துக்களை நானும், எனது மகனும் அனுபவித்து வருவதால் என் கணவர் வாங்கிய கடனை நானும், எனது மகனும் வாரிசுகள் என்ற

முறையில் செலுத்த கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் வழக்கு தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.11.20 15:32:43 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**